மேதகு ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரத்தில் இரண்டு மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து இன்று (20.2.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை:–

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாவூர் கிராமத்திற்கு அருகேயுள்ள ஒரு புதரில் கடந்த 05.02.2015 அன்று இருவர் காயங்களுடன் கொலை செய்யப்பட்டு கிடந்தது தொடர்பாக பாவூர்சத்திரம் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டதில் இறந்துபோன நபர்கள் சுரண்டை காவல்நிலைய சரகம், இனாம் வெள்ளக்கால் கிராமத்தை சேர்ந்த மாரிச்செல்வம் (வயது 16) மற்றும் அவரது நண்பர் முருகன் (வயது 17) எனவும், மாரிச்செல்வம், பாவூர்சத்திரத்திலுள்ள ஐடிஐ ஒன்றில் முதலாம் ஆண்டு படித்து வந்ததாகவும், முருகன் தென்காசி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பதினொறாம் வகுப்பு படித்து வந்ததாகவும் தெரிய வந்து, மாரிச்செல்வத்தின் தாயார் அளித்த புகாரின் பேரில் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் கொலை வழக்கு (கு.எண்.44/2015) பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில், இறந்து போன இருவரும் எங்கு சென்றாலும் ஒன்றாக செல்வார்கள் என்பதும், 01.02.2015 அன்று காலை இருவரும் கிராமத்தை விட்டு சென்றவர்கள் வீடு திரும்பவில்லை என்பதும், இவ்விரு மாணவர்களுக்கும் குறும்பலாபேரி என்ற கிராமத்தைச் சேர்ந்த அழகர் (எ) சுடலைசாமி என்பவருக்கும் பழக்கம் இருந்து வந்ததும், அம்மூவரும் ஒன்றாக இருசக்கர வாகனங்களில் சென்று வந்துள்ளதும், கொலையுண்ட மாரிச்செல்வம் மற்றும் முருகன் ஆகிய இருவரும் காணாமல் போன 01.02.2015 அன்று சுடலைசாமியுடன் சேர்ந்து ஒன்றாக ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றதும் தெரியவந்தது. சுடலைசாமிக்கும் மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட பிரச்சனையினால், சுடலைசாமி அவர்களை கொலை செய்திருக்கலாம் என சந்தேகப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சுடலைசாமியை தேடிவந்த நிலையில், அவர் 04.02.2015 அன்று பூச்சிக்கொல்லி மருந்தை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டதும், அவரது உடலை உறவினர்கள் காவல் நிலையத்திற்கு தகவல் ஏதும் தெரிவிக்காமல் எரித்து விட்டதும் தெரியவந்தது.

இக்கொலை வழக்கில், தற்கொலை செய்து கொண்டு இறந்து போன சுடலைசாமியின் தொடர்பு குறித்து அறிய, அவரது வீட்டை சோதனையிட்டதில் அங்கு இரத்தக்கறைப் படிந்த ஆடைகள் மற்றும் இறந்து போன மாணவர் ஒருவரின் நோட்டுப்புத்தகம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. இதுவரை சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலும், சாட்சிகளின் வாக்குமூலங்கள் அடிப்படையிலும், சுடலைசாமி, மேற்படி இரு மாணவர்களையும் கொலை செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இறந்து போன மாணவர்கள் இருவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 302 இதச மற்றும் 3(2)(v) SC/ST (POA) சட்டம் 1989 படி 14.02.2015 அன்று மாற்றம் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இவ்வழக்கில் இறந்து போன மாரிச்செல்வம் மற்றும் முருகன் ஆகியோரின் உறவினர்கள் மாவட்ட நிர்வாகத்திடம் தக்க நிவாரணம் அல்லது அவர்களது குடும்ப நபர் ஒருவருக்கு அரசு வேலைக் கேட்டு பிரேத மருத்துவ பரிசோதனைக்கு பின்பு பிரேதத்தை பெற்றுக் கொள்ள மறுத்தனர். வருவாய் மற்றும் காவல் துறையினர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், அவர்கள் பிரேதத்தைப் பெற்றுக் கொண்டனர். தற்போது சட்டவிதிமுறைகள் படி இறந்து போன இருவரின் குடும்பங்களுக்கும் உரிய நிவாரணத்தை அளிக்க வருவாய் துறையினர் முன் வந்தபோது அதை அவர்கள் பெற்றுக் கொள்ளாமல் அதிக நிவாரணம் கேட்டு மறுத்து வருகின்றனர்.

மேலும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு சாட்சியத்தின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்க வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******